செரண்டிப் சிறுவர் இல்லம்
Giving in moton...

# செய்திமடல்

மலர் : 1 தற்போதைய நிகழ்வுகள் தை – 2016

# புதிய ஆண்டு, புதிய திட்டங்கள்!

## சமூகத்தில் நல்கை

எங்கள் முதல் திட்டம் ஆனது 2010 ஆண்டில் 'சமூகத்தில் உள்ள நல்கை' என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்டு, தாய் தந்தையரை இழந்த குழந்தைகளுக்கு உதவும் வகையில், ஒவ்வொரு ஏழைக் குழந்தையுடன் தனிப்பட்ட அனுசரணையாளரை இணைக்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

ஒரு மாத நன்கொடையானது அக்குழந்தையின் உணவிற்கும் அவர்களின் கல்வித் தேவைக்கும் உதவி செய்ய உறுதுணையாக இருக்கின்றது. போர் முடிந்து ஆறாண்டு காலம் ஆகியும், பல குழந்தைகள், வறுமைக்கு உட்பட்ட சூழ்நிலையில் தான் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். வேலைகள் இல்லாத பெற்றோர், போதுமற்ற சுத்தமான தண்ணீர் வசதி மற்றும் மின்சார



வசதி அற்ற கிராமங்கள், அனைத்தும் ஒரு ஏழ்மை வாழ்க்கைக்கு வழி வகுக்கின்றன. அத்தகைய குடும்பங்களின் எதிர்கால முன்னேற்றதுக்கு நல்ல கல்வி மிக முக்கியம் என்று நங்கள் நம்புகிறோம். நீங்கள் இக்குழந்தைகளின் கல்விக்கு மாதம் வெறும் £5 பங்களிப்பு செய்வதன் மூலம் அவர்களின் மிக அத்தியாவசியமான கல்வியைப் பெற உதவ முடியும். இன்றே உதவிடுவீர்!!

## வாழ்வாதார உதவிகள்




நடந்து முடிந்த போரினால் சுமார் 90,000 பெண்கள் தங்களது கணவரை இழந்து உள்ளார்கள். அவர்களின் குடும்ப வாழ்க்கை மிகவும் கடினமாக உள்ளது.

சமூகப் பாதுகாப்பு மற்றும் அரசாங்க உதவிகள் இவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு மிக அரிதாகவே உள்ளது.

இவ்வாறு சிறு இலவச உதவிகள் வந்தாலும் கூட அவர்கள் பிரச்சனை ஆனது ஒரு நீண்ட கால தீர்வை அடைவது கடினமாக உள்ளது. குறிப்பாக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் ஒரு நிலையான வருமானத்தை பெறுவதற்கு வாழ்வாதார திட்டங்கள் துணை புரிகின்றன. இவர்கள் சிறு தொழில்கள் அமைக்க முதலீட்டு முன்பணம் வழங்கும் திட்டம் இன்றியமையாதது ஆகிறது

தனிப்பட்ட அனுசரணையாளர்கள் உதவியுடன் செரெண்டிப் நிறுவனம் இதுவரை விதவைகள் உட்பட 500 க்கும் மேற்பட்ட பெண்களுக்கு இத்திட்டங்கள் மூலம் ஒரு நிலையான வருமானத்திற்கு வழி வகுத்துள்ளது. உதாரணமாக, சிறிய கோழி பண்ணைகள், துணி தயாரித்தல், கால்நடை வளர்ப்பு மற்றும் சிறிய கடைகள் போன்ற சிறு தொழில்களை அமைத்து கொடுத்துள்ளது.

செரெண்டிப் நிறுவனதின் 2016 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், கடந்த தை மாதம், கிளிநொச்சியில் முப்பது பெண்களுக்கு நபருக்கு ரூ.50,000 வீதம் சிறு தொழில் முதலீட்டுக்கு முன்பணம் அளித்துள்ளது. இந்த முதலீடானது, 24 மாத மீட்பு காலக்கெடு அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. இக் காலக்கெடுவின் நோக்கமானது மேலும் பல பெண்களின் சிறு தொழில் முதலீட்டுக்கு உதவி செய்ய வாய்ப்பளிக்கின்றது. இதே போன்று பங்குனி மாதத்தில் கொக்குளாய் பிரதேசத்தில் (முள்ளியவளை) மேலும் முப்பது பெண்களுக்கு உதவி வழங்கும் திட்டம் நிறைவேறி உள்ளது.



**வாழ்வாதார, சிறு தொழில் முதலீட்டு உதவி**

**Sponsor one-off Livelihood small business project**

**£250** ஒருவருக்கு

# தகவல் தொழில்நுட்பம் – இளைஞர்களின் எதிர்காலம்

தகவல் தொழில்நுட்பம் ஆனது, இக்கால கட்டத்திற்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக கருதப்படுகிறது. அந்நிய நாடுகளில் இது பெருவளர்ச்சி அடைந்து கிட்ட தட்ட அனைத்து துறைகளிலும் தகவல் தொழில்நுட்பத்தின் ஆதிக்கம் உள்ளது. எமது நாட்டில் குறிப்பாக வடக்கு கிழக்கில் இத் தொழில்நுட்பமனது வெகுவாக பின்னடைந்து உள்ளது.

இதன் முன்னேற்றத்திற்காக செரெண்டிப் நிறுவனம் பல வகை உதவிகளை புரிந்து வருகின்றது. அதிலொன்றாக சமீபத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளில் உள்ள ஐந்து தகவல் தொழில்நுட்ப மையங்களுக்கு 75 கணினிகளை அனுப்பி வைத்துள்ளது .

2013 முதல் வன்னியில் உள்ள 32 பாடசாலைகளில், மேலதிக வகுப்புக்களை நடாத்த செரெண்டிப் நிறுவனம் நிதியுதவி செய்து வருகிறது.

இதன் காரணமாக 'சாதாரண ' மற்றும் 'உயர் ' நிலை தேர்வின் தேர்ச்சி வீதம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து உள்ளதை நாங்கள் காண்கின்றோம்.



## ஒரு குழந்தையின் மாதாந்த உணவு மற்றும் கல்வி தேவையை பூர்த்திசெய்ய உதவிடுவீர் !! மாதாந்தம் £5 இருந்து

Sponsor a child... food & educational material for as little as




# திறந்த பல்கலைக்கழக விரிவாக்கம்

நாம் தொழில்முயற்சி மற்றும் வணிக முகாமைத்துவ (திறந்த) பல்கலைக்கழக பட்டப் படிப்புகளை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு நிதி ஆதரவு அளித்து வருகின்றாம். இதில் தற்போது பொறியியல் பட்டப் படிப்புக்களையும் இணைத்து இருக்கிறோம்.

இந்த நிதியுதவியின் நோக்கமானது போர் சூழ்நிலை மற்றும் வளங்கள் பற்றாக்குறை காரணமாக ஒரு ஏழை மாணவ/ மாணவி குறைந்த மதிப்பெண் பெற்றதும். அதன் நிமித்தம் எந்த ஒரு பல்கலைக்கழகங்கதிலும் ஒரு இடத்தை பெற முடியவில்லை எனில். அந்த மாணவ/மாணவி இரண்டாவது வாய்ப்பாக அவர்கள் விரும்பும் கல்வியை (திறந்த) பல்கலைக்கழகத்தினுடாக தொடர உதவிபுரிகின்றது.




# நுண்கலைக் கல்வி

கடந்த ஆண்டு 'கலாச்சாரத்தின் ஆண்டு' என்னும் திட்டத்தின் ஒரு பகுதியாக, நாம் ஒரு சிலபாடசாலைகளிற்கு பாரம்பரிய வாத்தியக் கருவிகளை வழங்கியிருக்கின்றோம். அது தவிர நாங்கள் வகுப்பாசிரியர்களுக்கு மேலதிக நிதியுதவி வழங்கி வன்னியில் இரண்டு நுண்கலை மையங்களை இயங்கி வருகின்றோம். ஒரு புதிய மையம் கிளிநொச்சி மாவட்டத்தில் திறக்கப்பட தயாராக உள்ளது. இம் மையங்கள் உள்ளூர் குழந்தைகளுக்காக வார இறுதிகளில் திறக்கப்படுகிறது.

அது தவிர உள்ளூர் பாடசாலைகளில் இசை மற்றும் நாடகப் போட்டிகளில் பங்குபெற விரும்பும் மாணவர்களை உக்கப்படுத்த நிதி ரீதியான உதவி வருகிறோம். இதன்காரணமாக கிளிநொச்சி மகா வித்தியாலயம் ஒரு தேசிய நாடகப் போட்டியில் அண்மையில் முதல் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.



## மாணவர்களின் பாட புத்தகங்கள் மற்றும் படிப்பு உபகரணங்கள் பெற இன்றே உதவிடுவீர் !!

£ உங்களால் முடிந்த தொகையை

Sponsor students books & educational material on any of your special occasions

# வெள்ள நிவாரணம்

கடந்த 2015 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், தெற்கு ஆசியாவில் கடும் மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இது வட இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. வட இலங்கையில் மட்டும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கோவில்களிலும் பாடசாலைகளிலும் சென்று தங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. செரண்டிப் நிறுவனம் வெள்ளத்தால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட பல கிராமங்களுக்கு உதவியது.

குறிப்பாக செல்வபுரம், வட்டுவாக்கால் , ஆறுமுகத்தான் குளம், பொன்நகர், பூதன்வயல் ஆகிய கிராமங்களில் அவர்களது உடனடி தேவைகளை வழங்குவதில் கவனம் செலுத்தி உலர் உணவு பொருட்கள் மற்றும் அடிப்படை ஆடைகளை வழங்கியது.

மேலும் டெங்கு காய்ச்சல் மற்றும் மலேரியா நோய்கள் வராமல் தடுக்க சிறு குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு 300க்கும் மேற்பட்ட கொசு வலைகள் வழங்கியது.




தமிழ்நாட்டிலும் பாதிக்கப்பட்ட சில கிராமங்களுக்கு உதவி வழங்குவதற்காக செரன்டிப் நிறுவனம் இங்கிலாந்தில் உள்ள பிற அறக்கட்டளை நிறுவனங்களுடன் இணைந்து நிதி உதவி செய்துள்ளது.




# நத்தார் வெற்றி

எமது ஏழாவது நத்தார் நிகழ்வானது 28.11.2015 அன்று இனிதே நடந்தது. ஆதரவாளர் எண்ணிக்கை அதிகரிக்க வழமைக்கு மாறாக புதிய பெரிய மண்டபத்தில் நடைபெற்றது. இது வழமை போல் மிக வெற்றிகரமாக அமைந்தது மட்டுமன்றி நன்கு பாராட்டப்பட்ட நிகழ்வாகவும் அமைந்துள்ளது. இதில் நாம் எங்கள் தொண்டுச் செலவுகளுக்காக £14,000 சேகரித்தோம். இந்த வருடத்திற்கான இந்நிகழ்வு வரும் கார்த்திகை மாதம் 26 ஆம் திகதி [26.11.2016] நடைபெற உள்ளது. இன்றே இந்த நாளை உங்கள் நாட்குறிப்பில் குறித்து வையுங்கள்.

# வரவிருக்கும் திட்டங்கள்

சிறப்பு தேவைகள் உள்ள சிறுவர்களுக்கு உதவுவது செரெண்டிப் திட்டங்களின் ஒன்றாகும். இந்த வருடம் ஒரு புதிய திட்டமாக மதி இறுக்கக் குறைபாடுள்ள (Autism) குழந்தைகளுக்களின் கல்வி முனேற்றம், ஆசிரியர்/பெற்றோருக்கான விசேட கல்விப் பயிற்சி மற்றும் மதி இறுக்கம் (Autism) தொடர்பான



விழிப்புணர்வு போன்ற திட்டங்களை முன்னெடுக்க இருக்கின்றோம். இதற்கான ஆராட்சி மற்றும் தகவல் சேகரிப்பு போன்ற விடயங்களை தற்போது முனேடுத்து வருகின்றோம். மதி இறுக்கம் (Autism) பற்றிய அறிவு அல்லது அனுபவம் இருப்பின் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுவதை வரவேற்கின்றோம்.

## நன்கொடை

நாங்கள் மேற்கொள்ளும் திட்டங்களுக்கோ அல்லது எங்கள் பொது வேலைகளுக்கோ உங்கள் நன்கொடை எதிர்பார்க்கப்படுகிறது. நம் நாட்டில் உள்ள எமது உறவுகளுக்கு எம்மால் வழங்க முடியவில்லை என்றால் வேறு யார் வழங்குவார்கள் ? கீழ் காணும் இணையத்தளத்தின் மூலம் நீங்கள் நன்கொடை அளியுங்கள்.

www.justgiving.com/serendipchildrenshome/Donate/

Trisha Selvaratnam (Chairperson, Board of Trustees)

Serendip Children's Home
34, Brightling Road,
Brockley,
London SE4 1SQ

www.serendipchildrenshome.com
trisha@serendipchildrenshome.com
Call: +44(0) 7799756158
www.facebook.com/SerendipChildrensHome

© 2009 Serendip Children's Home
Registered with the Charity Commission
of England and Wales (1133461)
and is a registered trademark

Serendip Children's Home
Giving in motion...

# Serendip Standing order Mandate

PLEASE COMPLETE ALL SECTIONS IN CAPITAL LETTER

## My contact details

Full Name:

Address:

Telephone Number:

Mobile Number:

Email Address:

## My donation

Amount (in figures): £10 Per Month ☐ Other amount: £ Per Month ☐

Amount (in words):

Date of first payment: __ / __ / 201_

and thereafter every month until further notice and debit my account accordingly

Payee Bank Name: Natwest PLC

Payee Account Name: Serendip Children's Home

Payee Account Number: 11637749 Sort code: 60-04-36

## My bank details

Account name:

Account number:

Sort code: __ - __ - __

Bank name:

Bank branch address:

Signature:

Date: __ / __ / 201_

## Gift Aid Declaration

giftaid it

I would like tax to be reclaimed on my donation under the Gift Aid Scheme. I am a UK taxpayer and pay an amount of income tax/or capital gain tax at least equal to the tax that can be reclaimed on my donation.

☐ Yes ☐ No

| Please send your completed form to: | For more information: | © 2009 Serendip Children's Home |
|---|---|---|
| Serendip Children's Home<br>34, Brightling Road,<br>Brockley,<br>London SE4 1SQ | www.serendipchildrenshome.com<br>trisha@serendipchildrenshome.com<br>Call: +44(0) 7799756158<br>www.facebook.com/SerendipChildrensHome | Registered with the Charity Commission<br>Of England and Wales (1133461)<br>Serendip Children's Home<br>is a registered trademark |